பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**19 06 2026** **FRIDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தொழில்துறையினருக்கும், இளையோருக்கும் இடையே இணைப்பை ஏற்படுத்தும் வகையில், வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான வேலைவாய்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. சிறிய நகரங்களிலும் மென்பொருள் பூங்காக்கள் ஏற்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. புதிய குற்றவியல் சட்டங்கள் தொடர்பான கண்காட்சி புதுச்சேரியில் இன்று தொடங்கியது.

4. அமெரிக்கா — ஈரான் இடையே சுவிட்சர்லாந்தில் நடைபெறவிருந்த பேச்சுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

5. ஆசிய ஜூனியர் ஜிம்னாஸ்டிக் சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<>>>>>>>

தொழில்துறையினருக்கும், இளையோருக்கும் இடையே இணைப்பை ஏற்படுத்தும் வகையில், வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான

வேலைவாய்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இந்த திட்டத்தின்கீழ், 2 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பிலான ஊக்கத்தொகையை பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு விடுவிடுத்து அவர் பேசினார்.

முதல் முறையாக பணியில் சேர்பவர்களின் மேம்பாட்டிற்காக இந்த திட்டம் செயல்படுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், இளையோர் மேம்பாட்டிற்கும் மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக அவர் கூறினார்.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் மூன்றரை கோடிக்கும் மேற்பட்ட புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் நோக்கில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

தமிழகத்தின் திண்டுக்கல்லில் உள்ள காந்திகிராம் கிராமிய பல்கலைக்கழகத்தில் இந்த நிகழ்ச்சியின் நேரலையில் பங்கேற்ற மாவட்ட தொழிலாளர் வைப்பு நிதி நிறுவன அமலாக்க அதிகாரி திரு கண்ணதாசன், இந்த திட்டத்தின்கீழ் இரண்டு விதமான ஊக்கத்தொகை வழங்கப்படுவதாக எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte — கண்ணதாசன் - 30 Sec. )***

இந்த திட்டம் பெரிதும் உதவிகரமாக உள்ளது என்று இதன்கீழ் பயனடைந்த தொண்டு நிறுவன அதிகாரி **Ancy** கூறினார்.

***(Sound Byte — Ancy - 37 Sec. )***

<<<<<>>>>>>>

நாடு முழுவதும் சிறிய நகரங்களிலும் மென்பொருள் பூங்காக்கள் ஏற்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இன்று பாட்னாவில் தகவல் தொழில்நுட்பத்துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

பீகார் மாநிலத்தில் தகவல் தொழில்நுட்பத்துறையின் வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளுக்கு அமைச்சர் பாராட்டு தெரிவித்தார்.

பீகார் அரசுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<>>>>>>>

மேகாலயாவில் விளையும் இஞ்சி ரகங்கள் உலக அளவில் வரவேற்பை பெற்றுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

வடகிழக்கு மாநிலங்களின் மிகப்பெரிய வாசனைப் பொருட்கள் பதப்படுத்தும் நிலையத்தை **Ri Bhoi** மாவட்டத்தில் உள்ள **Bhoriymbong-**ல் தொடங்கிவைத்து அவர் பேசினார்.

**32** கோடி ரூபாய் செலவில் இந்த நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வருடத்திற்கு **10** ஆயிரம் மெட்ரிக் டன் வாசனைப் பொருட்களை பதப்படுத்தும் திறன் கொண்டது இந்த நிலையம் என்றும் அவர் கூறினார்.

விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க இதுபோன்ற நடவடிக்கைகள் உதவிடும் என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், வடகிழக்கு மாநிலங்களின் முதலமைச்சர்கள் பங்கேற்றனர்.

<<<<<>>>>>>>

ஜார்கண்டில் மின் விநியோகத்தில் ஏற்படும் இழப்புகளை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய அமைச்சர் திரு மனோகர்லால் கூறியுள்ளார்.

இன்று ராஞ்சியில் நகர்ப்புற வளர்ச்சி மற்றும் மின் திட்டங்களின் செயலாக்கம் குறித்து அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

பழங்குடியினர் அதிகம் வசிக்கும் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடியிருப்புப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

நகர்ப்புற பகுதிகளில் ஸ்மார்ட் மின் மீட்டர் பொருத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் இந்த ஆய்வின்போது அமைச்சர் கேட்டறிந்தார்.

<<<<<>>>>>>>

சர்வதேச யோகா தினமான நாளை மறுநாள் இந்திய விமானப்படை சார்பில் நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

லே தொடங்கி, கார் நிக்கோபார் தீவுகள் வரை யோகா நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளதாக விமானப்படையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

விமானப்படை அதிகாரிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர், மணவர்கள் மற்றும் தேசிய மாணவர் படையினர் இதில் பங்கேற்க உள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>>

புதிய குற்றவியல் சட்டங்கள் தொடர்பான கண்காட்சி புதுச்சேரியில் இன்று தொடங்கியது.

துணைநிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் மற்றும் முதலமைச்சர் திரு ரங்கசாமி இணைந்து இதனை தொடங்கிவைத்தனர்.

புதிய குற்றவியல் சட்டங்கள் தொடர்பான அனைத்து அம்சங்களும் இந்த கண்காட்சியில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

இந்த சட்டங்களை செயல்படுத்துவது தொடர்பாக காவல்துறை, நீதிமன்றம் மற்றும் இதர தொடர்புடைய அலுவலகங்களின் செயல்பாடுகள் குறித்த விளக்கமும் இந்த கண்காட்சியில் இடம்பெற்றிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>>>

மேகதாது பிரச்சினை தொடர்பாக தமிழக முதலமைச்சர் திரு விஜய்யுடன் பேச்சு நடத்த தயாராக இருப்பதாக கர்நாடக முதலமைச்சர் திரு **D K** சிவகுமார் கூறியுள்ளது, காங்கிரஸ் கட்சியின் இரட்டை நிலைப்பாட்டை எடுத்துரைப்பதாக உள்ளது என்று பிஜேபி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அம்மாநில சட்டப்பேரவை எதிர்க்கட்சி தலைவரும், பிஜேபி மூத்த தலைவருமான திரு அசோகா

வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில் ஆளும் தவெக அரசில் அங்கம் வகிக்கும் காங்கிரஸ் இந்த திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியல் லாபத்திற்காக காங்கிரஸ் இத்தகைய நிலைப்பாட்டை மேற்கொள்வதாகவும் திரு அசோகா குற்றம் சாட்டியுள்ளார்.

<<<<<>>>>>>>

கேரளத்தில் நடப்பு நிதியாண்டிற்கான பட்ஜெட்டை அம்மாநில முதலமைச்சர் திரு சதீசன் இன்று சட்டப்பேரவையில் தாக்கல் செய்தார்.

மகளிர் பாதுகாப்பு மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிப்பதற்கான அம்சங்கள் இந்த பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ளன.

காவல் நிலையங்கள்தோறும் கூடுதலாக பெண் காவல் அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள் என்றும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>>

திரிபுராவில் ஆயுர்வேதா மருத்துவக்கல்லூரி மருத்துவமனையை ஏற்படுத்துவதற்கு ஒப்புதல் கிடைத்துள்ளதாக அம்மாநில முதலமைச்சர் டாக்டர் **Manik Saha** கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்திய மருத்துவ முறைக்கான தேசிய ஆணையம் இதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

**Gomati** மாவட்டத்துக்கு உட்பட்ட உதய்பூரில் இந்த மருத்துவக்கல்லூரி மருத்துவமனை ஏற்படுத்தப்பட உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த ஒப்புதலை வழங்கியதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் டாக்டர் **Manik Saha** தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>>>

மணிப்பூரில் அமைதியை பராமரிப்பதற்காக பல்வேறு சமுதாயத்தினருடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு **Khemchand Singh** கூறியுள்ளார்.

இம்பாலில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், எந்தவொரு பிரச்சினைக்கும் பேச்சுக்கள் மூலமே தீர்வுகாண முடியும் என்று குறிப்பிட்டார்.

<<<<<>>>>>>>

ஜார்கண்டில் இடி மின்னல் தாக்கியதில் எட்டு பேர் உயிரிழந்தனர்.

**Ramgarh, Palamu, Lohardaga, Godda** மற்றும் மேற்கு **Singhbhum** மாவட்டங்களில் கடந்த **24** மணிநேரத்தில் இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மோசமான வானிலை ஏற்படும் நேரங்களில் பொதுமக்கள் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பின்பற்றுமாறும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>>

அமெரிக்கா — ஈரான் இடையே சுவிட்சர்லாந்தில் நடைபெறவிருந்த பேச்சுக்கள் ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுவிட்சர்லாந்து வெளியுறவுத்துறை இதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா, ஈரான், கத்தார் மற்றும் பாகிஸ்தான் இந்த பேச்சுக்களில் பங்கேற்க இருந்ததாகவும், சுவிட்சர்லாந்து வெளியுறவுத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இருப்பினும், இந்த பேச்சுக்களை சுவிட்சர்லாந்தில் நடத்துவதற்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே, ஈரான் உடனான பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக அமெரிக்கா கூறியுள்ளது.

<<<<<>>>>>>>

ஆசிய ஜூனியர் ஜிம்னாஸ்டிக் சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

சீனாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் குழு பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

---------------------

பிரெஞ்ச் பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Nitesh Kumar** மற்றும் **Pramod Bhagat** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் **Nitesh Kumar, 21-14, 21-12** என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Umesh Vikram Kumar-**ஐ வென்றார்.

மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் **Pramod Bhagat 21-18, 21-11** என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Jagdish Dilli-**ஐ வென்றார்.

<<<<<**END**>>>>>>>